# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 18.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1489/D/2020**

திரு G.சரவணன் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
கும்பகோணம் நகராட்சி, தஞ்சாவூர் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 24.10.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 15.11.2019 & 21.01.2020 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 23.12.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 11.02.2020 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (18.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் மனுதாரரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திருமதி. ஹேமலதா, மேலாளர், கும்பகோணம் நகராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் கும்பகோணம் நகராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கடந்த 01.01.1940 முதல் 31.12.1950 வரை உள்ள காலங்களுடன் தொடர்புடைய எந்தெந்த சொத்துவரி விதிப்பு டிமாண்ட் ரிஜிஸ்டர்கள் கும்பகோணம் நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற விவரம், ஆவணங்கள் ஒவ்வொன்றும் எந்த ஆண்டிற்கு தொடர்புடையவை என்ற விவரம் மற்றும் ஆவணங்கள் அழிக்கப்பட்டிருப்பின் ஆவண அழிப்பு பதிவேட்டின் நகல் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 2 இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (18.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், அவர் கோரும் ஆவணங்கள் 80 ஆண்டுக்கு முன்னால் உள்ள ஆவணங்கள் என்பதால், மனுதாரர் தேவையான தகவலை குறிப்பிட்டு கோரினால் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் மனுதாரரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் குறிப்பிட்டு கோரும் தகவல்களை வழங்கத் தயாராக இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, மனுதாரர், அலுவலக வேலை நாட்களில் கும்பகோணம் நகராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக சென்று தேவையான தகவலைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். அவ்வாறு மனுதாரர், கும்பகோணம் நகராட்சி அலுவலகத்தை அணுகும் பட்சத்தில், மனுதாரருக்கு தகவல்கள் வழங்க கும்பகோணம் நகராட்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1489/D/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
கும்பகோணம் நகராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு G.சரவணன்,
எண்.2-248/2, கோவிந்தராஜா கோவில் தெரு,
பசுபதி கோவில் தெரு,
தஞ்சாவூர் மாவட்டம் - 614 206.

Copy to: File
SNPA 19.11.2020